**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 113 /2020 PW . 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில் | தந்தை/கணவர் பெயர்: ஆறுமுகம் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.05.2026

---

**(1,2 எதிரிகள் ஆஜர். 3,4,5 எதிரிகள் ஆஜரில்லை. 3,4,5 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**19.05.2026 சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. 05.09.2020 ம்தேதி காலை 09.30 மணியளவில் சம்பவம் நடந்தது. எதிரிகள் அனைவரும் எனது உறவினர்கள். எனது மனைவி மீது இட சம்மந்தமாக 1ம் எதிரி சீவில் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 23/2020 வழக்கு தாக்கல் செய்து சம்பவம் நடைபெறும் போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது மனைவி மதுரை உயர் நீதிமன்றத்தில் மேற்படி இடத்திற்கு பாதுகாப்பு மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. சம்பவ இடமானது மாதவராயன்பட்டி கீழமேல் ரோடு என்றால் சரிதான். மேற்படி சம்பவம் மாதவராயன்பட்டி ரோட்டுக்கு தென்புறம் நடைபெற்றது. 1ம் எதிரிக்கு பாத்தியமான புளியமரத்திற்கு அருகே நடந்தது. மாதவராயன்பட்டி தென்வடல் ரோடு என்றால் தவறு. மேற்படி சம்பவம் மாதவராயன் பட்டிக்கு கிழக்கு புறம் நடந்தது. பிரச்சனை உள்ள இடத்தில் வீடு கட்ட முற்பட்ட போது சம்பவம் நடந்தது என்றால் சரிதான். அந்த சமயத்தில் வேலை பார்ப்பதற்கு கொத்தனார், சித்தாள் ஆகியோர் வந்திருந்தார்கள் என்றால் சரிதான்.

3. 1ம் எதிரி மேற்படி இடத்தில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் வேலை பார்க்க கூடாது என்று சொன்னார் என்றால் சரிதான். அதனை மீறி நாங்கள்

வேலை பார்த்தோம் என்றால் சரிதான். 1ம் எதிரி எங்கள் தரப்பினர் அடித்து காயப்படுதியதால் , 1ம் எதிரி மருத்துவ சிகிச்சை பெற்றார் என்றால் அது பற்றி எங்களுக்கு தெரியாது. எங்கள் மீது STC–330/2020 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நேரடியாக மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம் என்றால் சரிதான்.

4. சம்பவ இடத்திற்கும் சிங்கம்புணரி காவல்நிலையத்திற்கு அருகே 15 கி.மீ இருக்கும். சம்பவ இடத்திலிருந்து சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு வருவதற்கு 20 நிமிடங்கள் ஆகும். நான் 10.30 மணிக்கு சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு வந்தேன். மருத்துவர் என்னை விசாரித்தார். மருத்துவரிடம் எங்களுக்குள் கைகலப்பு ஏற்பட்டதாக சொன்னோம் என்றால் சரிதான்.

5. 1ம் எதிரி எனது மனைவியை, கம்பியால் அடித்த விவரத்தை போலீஸ் விசாரணையிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன். 1ம் எதிரி எனது மனைவியை கம்பியால் அடிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது போலீஸ் விசாரணையிலும், முதல் விசாரணையில் எந்தெந்த எதிரி எந்தெந்த இடத்தில் அடித்தாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. 1ம் எதிரி வழக்கு நிலுவையில்இருக்கும் பாது வேலை பார்க்க கூடாது என்று சொன்னததற்காக நான், எனது மனைவி, மாமனார் 1வது எதிரியை அடித்து காயம் படுத்தினோம் என்றால் சரியல்ல. 2 முதல் 5 எதிரிகள் சம்பவ இடத்திற்கே வரவில்லை என்றாலும் அவர்கள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்தோன் என்றால் சரியல்ல. நாங்கள் 1வது எதிரியை அடித்து காயப்படுத்தியத்திற்கு அந்த வழக்கில் இருந்து தப்பிபதற்காக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிய்ல்ல. மருத்துவமனையில் போலீஸ்சார் அன்றையை தினம் 6–7 மணியளவில் விசாரித்தார்கள். நான் சொல்ல, சொல்ல புகார் எழுதிக்கொண்டார்கள். நான் சொன்ன நேரத்தில் சம்பவமே நடக்க வில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.